தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளின் தரம் III இற்குப் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் நிலவுகின்ற தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) (வெற்றிட எண்ணிக்கை 01), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) (வெற்றிட எண்ணிக்கை 01) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) (வெற்றிட எண்ணிக்கை 01) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவை வகுதியின் தரம் III இற்கு தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026" எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி .... ஆகும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் அல்லது அது சார்ந்த கடிதங்கள் தபாலில் தொலைந்துவிட்டன என்றோ அல்லது தாமதமாகிவிட்டன என்றோ கூறப்படும் முறையீடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

2 பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள்:

I. தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)

பதிவுகளின் காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய தேவையான ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவு

பேணுகைகுப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரப்பரிசோதனைகளை மேற்கொள்ளல், பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல தரப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அவதானிப்புகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளின் மோசமடைதல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் பேணுகை, காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய இரசாயன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வழிகாட்டலின் கீழ் உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

II. **<u>தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)</u>**

மின்னணு பதிவுகளை ஈர்த்தெடுப்பதற்கான மென்பொருட்களை இனங்காணல் மற்றும் ஈர்த்தெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வழங்குதல், மின்னணு காப்பகஆவணமொன்றைப் பேணிச்செல்லல் மற்றும் அதற்கான தரநிலைகளை நடைமுறைப்படுத்தல், ஈர்த்தெடுக்கப்படும் எண்மிய ஆவணங்களை நீண்டகாலமாகப் பேணுவதற்காக அவ்வப்போது பொருத்தமான ஊடகங்களுக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பதிவுகளை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல- கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

III. **<u>தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல)</u>**

திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளை உள்வாங்கிக் கொள்ளல் மற்றும் அவ்வைப்பை முகாமைத்துவம் செய்தல், அப்பதிவுகளை இனங்காணல் மற்றும் விவரித்தல் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது குறித்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணத்தைப் பேணிச்செல்லல் மற்றும் அப்பதிவுகளின் பேணுகை மற்றும் மீட்டெடுக்கத் தேவைகளைக் கண்டறிந்து அதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை

இனங்காணல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணங்களை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான கணினி வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை அவ்வப்போதைய தரநிலைகளுக்கு ஏற்ப இனங்காணல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

3 சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்க வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1 ஆம் திறமைகாண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய மற்றும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கு நிகரொத்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, ஏனைய அரசகரும மொழி/மொழிகளில் குறிப்பிட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதிபெறும் மொழிமூலமானது, உங்களால் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் மொழிமூலமாகும்.

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய திணைக்களக் கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்பட்டதாகும்.

4 சம்பள அளவுத்திட்டம் :

இப்பதவிக்கு 2025.03.25 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க, SL1-2025 ரூபா. 82,150 - 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 - 195,970/- (மாதாந்தம்) என்ற சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, அதன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

5 கல்வித் தகைமைகள் :

i. <u>தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)</u>

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது *1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25A* ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்,
காப்பகஆவணக் காப்பு அல்லது இரசாயனவியல் பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

காப்பகஆவணக் காப்பு அல்லது இரசாயனவியல் பாடத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் முதுகலைப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

ii. **<u>தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமயமாக்கல்)</u>**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது *1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25A* ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்,
கணினி அறிவியல், கணினி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

கணினி அறிவியல், கணினி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் முதுகலைப் பட்டத்தையும் பெற்றிருத்தல்

2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

iii. **<u>தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல)</u>**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்

அல்லது *1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25A* ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்,
கலைமாணி, கட்புல வடிவக் கலைமாணி, நுண்கலைமாணி பொதுப் பட்டத்துடன் முதுகலைப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

கலைமாணி, கட்புல வடிவக் கலைமாணி, நுண்கலைமாணி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

2. க.பொ.த. *(சாதாரண தர)* பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த *(உயர்தர)* பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

குறிப்பு

பட்டப்படிப்பானது செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னைய ஒரு திகதியாகவோ இருத்தல் வேண்டும்.

6 வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இருபத்தொன்று *(21)* வயதுக்கு குறையாமலும் முப்பத்தைந்து *(35)* வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.

7 உடற் தகைமைகள்:-

எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

8 ஏனைய தகைமைகள்:

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவசியப்படும் சகல தகைமைகள் மற்றும் நிபந்தனைகளையும் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9 ஆட்சேர்ப்பு முறைமை :

எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.
எழுத்துப் போட்டிப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு பாடத்திற்கும் *50%* அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து, புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று *04* மடங்கு விண்ணப்பதாரர்கள்

தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் போதே அடிப்படைத் தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களையோ அல்லது அனைத்து வெற்றிடங்களையோ நிரப்புவது அல்லது நிரப்பாதிருப்பது என்பன தொடர்பிலும், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10 எழுத்துப் பரீட்சை:

10.1 இப்பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

10.2 பாடத் திட்டம்

i. தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் *(தொழில்நுட்ப)/* தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் *(மின்னணு பதிவு*கள் மற்றும் எண்ணிமமயமாக்கல்*)* மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் *(*திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல*)*

இலக்கம்	**பாடங்கள்**	**பாடத் திட்டம்**	**நேரம்**	**மொத்தப் புள்ளிகள்**	**வெட்டுப் புள்ளிகள்**
01	நுண்ணறிவுத் தேர்வு	விண்ணப்பதாரரின் பொது அறிவு, தர்க்கரீதியான திறன், கருத்து வெளிப்பாட்டுத் திறன், எண்கள், மொழி மற்றும் வடிவ அமைப்புகள் மற்றும் அவற்றுக்கிடையேயான பரஸ்பரத் தொடர்புகள் குறித்து முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வுத் திறன், வியாக்கியானம் செய்யும் திறன், ஏனைய சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்தும் திறன் மற்றும் முடிவுகளை எட்டுதல் ஆகியவை தொடர்பில் விண்ணப்பதாரரின் புத்திக்கூர்மையின் மட்டத்தை மதிப்பிடுவதே இந்த வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.	*01* மணித்தியாலம்	*100*	*50*
02	ஆங்கிலம்	எழுத்தாற்றல் • தொடர்புடைய	*02* மணித்தியாலம்	*100*	*50*

		துறையில் நவீன மாதிரிப் படிவங்கள் மற்றும் எழுத்து நடைகள் பற்றிய அறிவு • உள்ளக தகவல் தொடர்பாடல் முறைகள் • உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றத் திறன் • விவரித்தல்/விளக்குதல் மற்றும் எழுதுதல் • இலக்கணம் • சுருக்கம் எழுதும் ஆற்றல் • அறிக்கை எழுதும் ஆற்றல் கிரகித்தல் • அச்சிடப்பட்ட உரையொன்றைப் புரிந்துகொள்வதற்கும், அதன் அர்த்தத்தை ஊகிப்பதற்கும், எழுதப்பட்டவற்றை விளக்குவதற்கும் விண்ணப்பதாரர்களுக்குள்ள திறன் எதிர்பார்க்கப்படுகிறது. • அச்சிடப்பட்ட உரையொன்றின் குறிப்பிட்ட மற்றும் பொதுவான அர்த்தத்தை வாசித்துப் புரிந்துகொள்ளல் மொழிபெயர்ப்புத் திறன் • தரப்பட்டுள்ள உரையொன்றின் அர்த்தம் மாறாத வகையில் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்த்தல்			

11 **தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபை ஒன்றின் மூலம் பின்வரும் புள்ளி வழங்கும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

i. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் *(*தொழில்நுட்பம்*)***

தொடரிலக்கம்	புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்	புள்ளிகள்	அதிபட்ச புள்ளிகள்
01	**மேலதிக கல்வித் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது *1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25A* ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளிலான முதுமாணிப் பட்டம் 1. ஆராய்ச்சி அடிப்படையிலானது 2. பாடநெறி அடிப்படையிலானது (அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.)	*15* *10*	*15*
02	**துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கலாசார மற்றும் வரலாற்று விழுமியங்களைக் கொண்ட பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு அறிவியல் , காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) 1. முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 2. முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 3. பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பகஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட கலாசார மற்றும் வரலாற்று விழுமியங்களைக் கொண்ட பொருட்களை செப்பனிடுதல், பாதுகாப்பு அறிவியல்,	*15* *10* *08* *04* *02*	*15*

	காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) 1. டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 2. சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக (குறைந்த பட்சம் 36 மணித்தியாலங்கள்)		
03	**துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள்** கலாசார மற்றும் வரலாற்று மதிப்பைக் கொண்ட பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு அறிவியல், காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் (தொடர்புடைய நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்). இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.	15	15
04	**நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள்** i. பதவியில் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் (Strengths questions) ii. சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் (Situational questions) iii. ஆற்றல் (Competency questions)	01 01 03	05
	மொத்தம்		**50**

ii. தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)

தொடரிலக்கம்	புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்	புள்ளிகள்	அதிபட்ச புள்ளிகள்
01	**மேலதிக கல்வித் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல், கணினிப் பொறியியல், தகவல்	15	15

	மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளிலான முதுமானிப் பட்டம். 1. ஆராய்ச்சி அடிப்படையிலானது 2. பாடநெறி அடிப்படையிலானது (அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.)	10	
02	**துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை , காப்பகஆவணமுகாமைத்துவம், பதிவுகள்முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) 1. முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 2. முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 3. பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பகஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை , காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக) 1. டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் 2. சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக (குறைந்த பட்சம் 36 மணித்தியாலங்கள்)	15 10 08 04 02	15
03	**துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள்** i. கணினி மென்பொருட்களை வடிவமைப்பதில் உள்ள அனுபவம்	15	15

	ஒரு மென்பொருளுக்கு *05* புள்ளிகள் வீதம் *(*பதிப்புரிமைச் சான்றிதழ் அல்லது காப்புரிம உரிமம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்*).* *ii.* கணினி அறிவியல், கணினிப் பொறியியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை , காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு *03* புள்ளிகள் வீதம் *(*தொடர்புடைய நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*)* *(*அதிகபட்ச தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்*)*		
04	**நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள்** *i.* பதவியின் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் *(Strengths questions)* *ii.* சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் *(Situational questions)* *iii.* ஆற்றல் *(Competency questions)*	*01* *01* *03*	*05*
	மொத்தம்		***50***

iii. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் *(*திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல*)***

தொடரிலக்கம்	புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்	புள்ளிகள்	அதிபட்ச புள்ளிகள்
01	**மேலதிக கல்வித் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது *1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25A* ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட	*15*	*15*

	நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கலைமாணி, கட்புலக் கலைகள், நுண்கலைகள், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளிலான முதுமானி பட்டம் *1.* ஆராய்ச்சி அடிப்படையிலானது *2.* பாடநெறி அடிப்படையிலானது *(அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.)*	*10*	
02	**துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் அறிவியல்,பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம், செவிப்புல - கட்புல காப்பகஆவண காப்பு ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு *(அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)* *1.* முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் *2.* முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் *3.* பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பகஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் அறிவியல், பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம், செவிப்புல -கட்புல காப்பகஆவண காப்பு ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு *(அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)* *1.* டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் *2.* சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக *(குறைந்தபட்சம் 36 மணித்தியாலங்கள்)*	*15* *10* *08* *04* *02*	*15*
03	**துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள்** செவிப்புல – கட்புல காப்பகஆவண காப்பு ¸ தகவல் முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம் ஆகிய துறைகளில்	*15*	*15*

	ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு *03* புள்ளிகள் வீதம் (தொடர்புடைய நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)		
04	**நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள்** *i.* பதவியின் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் *(Strengths questions)* *ii.* சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் *(Situational questions)* *iii.* ஆற்றல் *(Competency questions)* ஆகிய விடயங்களை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்ட வினாக்களுக்கு வழங்கப்படும் பதில்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.	*01* *01* *03*	*05*
	மொத்தம்		***50***

கவனத்திற் கொள்ளவேண்டியது:

தகைமைக்கான நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்வதானது, நியமனம் ஒன்றை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒன்றாகக் கருதப்பட மாட்டாது

12 பரீட்சை நிபந்தனைகள்:

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தான் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் இத்தேர்வின் அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழியூடகத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

II. பரீட்சைக் கட்டணம் ரூபா. *1200* ஆகும். மேலும், அந்தப் பரீட்சைக் கட்டணத்தை "தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்" எனும் பெயரில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையிலுள்ள *086-1001-3902-6218* எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்து, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பின் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. (பூர்த்தி செய்யப்பட்ட

விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

III. இப்பரீட்சையானது கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

IV. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்பத்திரங்களும், அதேபோன்று அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பப்பத்திரங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

V. விண்ணப்பப்பத்திரமானது செ.மீ. 21.0 × 29.7 (A4) அளவுள்ள தாள்களில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு இணங்க அமைந்திருத்தல் வேண்டும். 01 தொடக்கம் 06 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும், 07 தொடக்கம் 08 வரையான தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய தகவல்கள் தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க அமையாத விண்ணப்பங்களும், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தொடர்புடைய விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும். விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித ஆவணத்தையோ அல்லது அதன் பிரதியையோ இணைக்கக் கூடாது.

VI. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன், அது பற்றிய அறிவித்தல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slida.lk) வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் எவரேனும் இருப்பின், அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பரீட்சைக் கிளையின் 011-5980264 அல்லது 011-5980255 ஆகிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை அது குறித்து வினவ முடியும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்

மற்றும் முகவரியை திருத்தமாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அதேபோன்று, பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அது குறித்து அறிவிக்கும் குறுஞ்செய்தி *(SMS)* ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

VII. அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமாகும். நிறுவனம் ஒன்றின் ஊடாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் ஒருவர், தனது கையொப்பத்தைத் தான் கடமையாற்றும் நிறுவனத்தின் தலைவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத ஏனைய விண்ணப்பதாரர்கள், அரச பாடசாலை அதிபர் ஒருவர்/ ஓய்வுபெற்ற தலைவர் ஒருவர், கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், ரூபா. *240,360/-* அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண சபைகள் சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்ட ஒருவர் ஆகியோரில் எவரேனும் ஒருவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

VIII. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரீட்சையை ஒத்திவைப்பதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

13 பரீட்சைக்கு தோற்றுதல் :

I. சகல விதத்திலும் முழுமைப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

II. பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில், தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டபப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

குறிப்பு - பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தவராகக் கருதப்பட மாட்டார்.

III. பரீட்சார்த்தி/ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

IV. அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

***14* போலியான தகவல்களுக்கான தண்டனை :**

எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

15 பரீட்சை நடாத்துதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாக நேரிடும்.

16 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

17 இவ்விதிமுறைகளில் கருத்திற் கொள்ளாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்பட்டு தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

18 பரீட்சைப் பெறுபேறுகள்

விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை பெறுபேறுகளை அறிவித்தல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

2026 .... ஆந் திகதி

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகையைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளின் தரம் *III* இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - *2026*

Open Competitive Examination for the Recruitment to the Grade III posts of National Archives Assistant Director (Technical), National Archives Assistant Director (Digital Records & Digitization), National Archives Assistant Director (Films & Audio Visual) in the Department of National Archives - 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - *2*
தமிழ் - *3*
ஆங்கிலம் - *4*
*(*உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்*)*

விண்ணப்பிக்கும் பதவி / பதவிகள் :

தெரிவுகள்	பதவி இலக்கம்
1	
2	
3	

*(*வர்த்தமானி அறிவித்தலின் *02* ஆம் பந்தி பிரகாரம் இலக்கமிடவும்.*)*

01. *1.1.* முழுப் பெயர் *(*ஆங்கில கெப்பிடல் எழுத்தில்*)* : ....

*(*உதா: *HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)* ……………………………………………

1.2 *1.2* இறுதியில் இடப்படும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் இட்டு பெயர்

*(*ஆங்கில கெப்பிடல் எழுத்தில்*)* ....

*(*உதா: *GUNAWARDHANA, H.M.S.K.)* ……………………………………………

1.3 முழுப் பெயர் *(*சிங்களத்தில்*/* தமிழில்*):* ....

....

02. *2.1* நிரந்தர வதிவிட முகவரி : ....

*(*ஆங்கில கெப்பிடல் எழுத்தில்*)* ....

2.2 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி *:* ....

. ...

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் *:* | | | | | | | | | | | | |

04. பெண் /ஆண் பால் நிலை *:* பெண் - *1*

*(*உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்*)* ஆண் - *0*

05. பிறந்த திகதி *:*

*(*அ*)* வருடம்*:* | | | மாதம்*:* | | | திகதி*:* | | |

*(*ஆ*)* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது *:*

வருடம்*:* | | | தம்*:* | | | *:* | | |

06. 6.1 கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

6.2 மின்னஞ்சல் முகவரி :- ....

07. கல்வித் தகைமைகள் :

i. பட்டப்பின் பட்டம்: ....

ii. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ....

iii. பதிவிலக்கம் : ....

iv. பட்டம் செல்லுபடியாகும் திகதி : ....

(ஆ)*i.* சாதாரண பட்டம் : ....

ii. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ....

iii. பதிவிலக்கம் : ....

iv. பட்டம் செல்லுபடியாகும் திகதி : ....

(இ) க.பொ.த *(உ/தர)*

பரீட்சைக்கு தோற்றிய வருடம் : [ ]

பரீட்சை சுட்டிலக்கம் : [ ]

பாடம்	சித்திகள்	பாடம்	சித்திகள்

(ஈ) க.பொ.த *(சா/த)* - இரண்டாம் தடவை

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் : [ ]

பரீட்சை சுட்டிலக்கம் : [ ]

பாடம்	சித்திகள்	பாடம்	சித்திகள்

08. பரீட்சைக் கட்டணம் *(* பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.*)*

i. செலுத்தப்பட்ட வங்கி : ....

ii. செலுத்திய தொகை :………………………………………………

iii. செலுத்திய திகதி : ....

iv. பற்றுச்சீட்டு இலக்கம் : ....

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

09. விண்ணப்பதாரியின் சான்றுரை/சான்றிதழ் :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானது என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

....

திகதி ஒப்பம்

10. விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தல் : **(ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)**

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்பிக்கின்ற திரு / திருமதி/ செல்வி .... ஆகிய நபரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் .... ஆம் மாதம் ....ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் :- ....

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- ....

பதவி :-……………………………………………………..........

முகவரி :……………………………………………………....

(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி :- ....

குறிப்பு : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 12 ஆம் பந்தியில் (VII) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

11. நிறுவனத் தலைவரின் பரிந்துரை : **(அரச நிறுவனம் ஒன்றின் ஊடாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்.)**

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு / திருமதி / செல்வி .... என்பவர் இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

.... உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை;

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி : ....

நிறுவனத் தலைவரின் பெயர் : ....

பதவி:…………………………………………………………………

சேவை நிலையத்தின் முகவரி: ....

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைகள் வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை

01. தொடர்புபடுகின்ற நிறுவனங்கள்

1.1 திணைக்களம் : தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்
தொடர்பு இலக்கம்: DNA/7/1/2 திகதி: 2017.12.08

1.2 அமைச்சு : கல்வி அமைச்சு
தொடர்பு இலக்கம் : ED/05/67/26/02/12 திகதி: 2018.03.02

1.3 முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பதவிகள் அங்கீகரிக்கப்படல்
தொடர்பு இலக்கம் :
DMS/1135 Vol – I திகதி: 2016.09.15
DMS/1135 Vol – I 2017.02.08
DMS/1135 Vol – I 2017.02.17

1.4 தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் விதப்புரை :

தொடர்பு இலக்கம்: EST-2/04/REC/10725 திகதி: 2018.03.08

1.5 தேசிய சம்பள, ஆணைக்குழுவின் விதப்புரை :

தொடர்பு இலக்கம் : NSCC/05/38/74/SR-II திகதி: 2018.02.15

1.6 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் :

தொடர்பு இலக்கம் : PSC/EST/02-01-34/06/2018 திகதி: 2018.06.14

02. நியமன அதிகாரி: அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

03. சேவை வகை பற்றிய விபரங்கள்

3.1 சேவை வகை : நிறைவேற்று
3.2 தரங்கள் : III, II மற்றும் I
3.3 ஒப்படைக்கப்படும் பணிப்பொறுப்புகள் பற்றிய பொதுவான வரைவிலக்கணம்:

பொதுவான இயல்புக்கிணங்க கொள்கை வகுத்தல், பணிப்புரை/கட்டளை பிறப்பித்தல், முகாமைத்துவம் மற்றும் அது சம்பந்தமான தீர்மானம் மேற்கொள்ளல் ஆகிய பணிகளில் உள்ளடங்கியதும் நிறுவனத்தின் அதிஉயர் நிறைவேற்று அலுவலருக்கு ஒப்படைக்கப்படுகின்ற ஒட்டுமொத்த பணிகள் மத்தியில் பதவிக்காக பதவிக்காக குறித்துரைத்து கையளிக்கப்படுகின்ற பணிகள் ஒப்படைக்கப்படுகின்ற சேவை வகையாகும்.

3.4 ஒப்படைக்கப்படும் பணிகள்:
பணிகள் தர அடிப்படையில் ஒப்படைக்கப்படாததோடு, இச்சேவை வகைகக்கு ஒப்படைக்கப்படும் பணிகளிலிருந்து எந்தவொரு பணியையும் சேவையின் தேவைப்பாட்டின் கீழ் சேவைமூப்பு மற்றும் திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு தரத்திலிமுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படலாம்.

04. பதவியின் / பதவிகளின் தன்மை: நிரந்த ஓய்வூதிய உரித்துடைய (ஓய்தியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.)

05. சம்பளம்:

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம்: SL1- 2016

5.2 சம்பளத் திட்டம்: ரூ. 47,615 –10 ×1335–8 ×1630–17×2170– ரூ. 110,895/=

5.3 தரமுறையும் தரமுறைக்கு இணங்க ஆரம்பச் சம்பளப் படிமுறையும் :

தரம்	**ஏற்புடைய ஆரம்பச் சம்பளப் படிமுறை**	**சம்பளம் (ரூ.)**
III	*படிமுறை 01*	*47,615/-*
II	*படிமுறை 12*	*62,595/-*
I	*படிமுறை 20*	*76,175/-*

சம்பளம் செலுத்துதலுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் 03/2016 ஆம் இலக்கமுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்.

06. சேவை வகைக்குரிய பதவிகள் / பதவிகள்

6.1 அங்கீகரித்த பதவிப்பெயர்கள், அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகள்:

அங்கீகரித்த பதவிப்பெயர்கள்	**பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்**	**அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை**	**பணிகள்**
தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர்	*I*	*03*	*பதிவு முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கை வகுத்தல், அவற்றை அமுலாக்குதல், அவை சம்பந்தமான தரநியமங்களை காலத்துடன் நேரொத்ததாக திருத்தியமைத்தல், அனைத்து அரச நிறுவனங்கள் சம்பந்தமாகவும் தயாரிக்கப்படவேண்டிய அட்டவணைகளை தயாரிக்கச் செய்வித்தலும் அது பற்றி ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதலும், தயாரிக்கப்படுகின்ற அட்டவணைகளை பரிசோதித்தல், அட்டவணைகளின் இறுதி தயாரிப்பு நிறைவடையும்வரை அலுவல்களை மேற்பார்வை செய்தல், திணைக்களத்தின் காப்பகப்படுத்தப்பட்ட பதிவுகள் சம்பந்தமாக கொள்கைகளை வகுத்தல், அவற்றை அமுலாக்குதல், காப்பகஆவணங்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக வசதியான முறையியல் மற்றும் தேடல் சாதனங்களை தயாரிக்க அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதலும் அவை சம்பந்தமான தரநியமங்களை காலத்துடன் நேரொத்ததாக திருத்தியமைத்தல், திணைக்கள கிளை அலுவலகங்களை அபிவிருத்தி செய்தல், உபநிலை அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அவர்களின் கடமைகளை மேற்பார்வை செய்தல் அல்லது*

அங்கீகரித்த பதவிப்பெயர்கள்	பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்	அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை	பணிகள்
			திணைக்களத்தின் மின்னணு பதிவுகள் உள்ளிட்ட அனைத்துவிதமான காப்பகப்படுத்தப்பட்ட பதிவுகள் மற்றும் அரச நிறுவனங்களின் அனைத்துப் பதிவுகளினதும் பாதுகாப்பு மற்றும் முற்பேணலுக்கான கொள்கைகளை வகுத்தல், மின்னணு ஆவணங்களின் முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகளை வகுத்தல், அவற்றை அமுலாக்குதல், அவை சம்பந்தமான தரநியமங்களை காலத்துடன் நேரொத்ததாக திருத்தியமைத்தல், உபநிலை அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அவர்களின் கடமைகளை மேற்பார்வை செய்தல் அல்லது மக்கள் தொடர்பு மற்றும் பயிற்சி அலுவல்களைத் திட்டமிடுதல், திணைக்களத்தின் சேவைகளை வழங்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி துரிதமானதும் வினைத்திறன் கொண்டதுமான சேவையை வழங்க அவசியமான முறையியல்களை தயாரித்தல், அதனோடு சம்பந்தப்பட்ட இலக்குகளை திருத்தியமைத்தலும் மேற்பார்வை செய்தலும், அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல், பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழிப்புணர்வூட்டுவதற்கான கருத்தரங்குகள், விரிவுரைகள், கண்காட்சிகளை நடாத்த அறிவுறுத்தல் வழங்குதல், திணைக்களத்தில் அமுலாக்கப்படுகின்ற அச்சக கட்டளைச்சட்டம், செய்தித்தாள் கட்டளைச்சட்டம் பற்றிய அறிவுறுத்தல்ளை வழங்குதலும் சிக்கல்களை தீர்த்துவைத்தலும், அதனோடு சம்பந்தப்பட்ட பணிகளை வினைத்திறன் கொண்டதாக்க அவசியமான தரநியமங்களை காலத்துடன் நேரொத்ததாக தயாரித்தல், உபநிலை அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அவர்களின் கடமைகளை மேற்பார்வை செய்தல் அல்லது தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் கையளிக்கப்படுகின்ற பதவிக்குரிய ஏனைய பணிகள்

அங்கீகரித்த பதவிப்பெயர்கள்	பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்	அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை	பணிகள்
தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர்	*II, III*	*05*	பதிவுகள் மதிப்பாய்வு, காப்பக களஞ்சியங்களின் பதிவுகள் நிருவாகம், காப்பகப்படுத்தப்பட்ட பதிவுகள் வகுத்துத் தொகுத்து அச்சிடல், நீதிமன்றத்தின் முன்னிலையில் காப்பகப்படுத்தப்பட்ட பதிவுகளை சார்ந்ததாக சாட்சியளித்தல், பதிவுகளை திரட்டுதல் மற்றும் அதற்கான மூலோபாயங்களை தயாரித்தல், பொதுமக்களின் விசாரணைகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல், தொழில்வாண்மைசார் கண்காட்சிகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தலும் நெறிப்படுத்துதலும், உபநிலை அலுவலர்களுக்கு வேலை இலக்குகளை வழங்குதலும் அவர்களின் கடமைகளை ஏற்பாடுசெய்தலும், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம் (பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி/பொதுமக்கள் உறவுகள், பயிற்சி மற்றும் சட்டபூர்வ வைப்புகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் கையளிக்கப்படுகின்ற பதவியுடன் தொடர்புடைய ஏனைய பணிகள்
தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)	*II, III*	*01*	பதிவுகளின் காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய தேவையான ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவு பேணுகைகுப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரப்பரிசோதனைகளை மேற்கொள்ளல், பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல தரப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அவதானிப்புகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளின் மோசமடைதல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் பேணுகை, காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய இரசாயன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வழிகாட்டலின் கீழ் உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக்

அங்கீகரித்த பதவிப்பெயர்கள்	பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்	அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை	பணிகள்
			கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.
தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் கட்புல செவிப்புல)	II, III	01	திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளை உள்வாங்கிக் கொள்ளல் மற்றும் அவ்வைப்பை முகாமைத்துவம் செய்தல், அப்பதிவுகளை இனங்காணல் மற்றும் விவரித்தல் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது குறித்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணத்தைப் பேணிச்செல்லல் மற்றும் அப்பதிவுகளின் பேணுகை மற்றும் மீட்டெடுக்கத் தேவைகளைக் கண்டறிந்து அதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை இனங்காணல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணங்களை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான கணினி வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை அவ்வப்போதைய தரநிலைகளுக்கு ஏற்ப இனங்காணல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.
தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)	II, III	01	மின்னணு பதிவுகளை ஈர்த்தெடுப்பதற்கான மென்பொருட்களை இனங்காணல் மற்றும் ஈர்த்தெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வழங்குதல், மின்னணு காப்பகஆவணமொன்றைப் பேணிச்செல்லல் மற்றும் அதற்கான தரநிலைகளை நடைமுறைப்படுத்தல், ஈர்த்தெடுக்கப்படும் மின்னணு பதிவுகளை நீண்டகாலமாகப் பேணுவதற்காக அவ்வப்போது பொருத்தமான ஊடகங்களுக்கு மாற்றுவதற்குத் தேவையான

அங்கீகரித்த பதவிப்பெயர்கள்	பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்	அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கை	பணிகள்
			நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பதிவுகளை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல-கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

6.2 ஒருங்கிணைந்த அலுவலர் எண்ணிக்கை:

1.	தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர்	03
2.	தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர்	05
3.	தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)	01
4.	தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் கட்புல செவிப்புல)	01
5.	தேசிய ஆவணக்காப்பகப் பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)	01
		11

தரம் ஒன்றிலிருந்து இன்னொரு தரத்திற்கு பதவியுயர்வு மேற்கொள்வதற்காக III, II, I தரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த ஒருங்கிணைந்த அலுவலர் எண்ணிக்கைக்குரியதாக கருதப்படும்.

07. ஆட்சேர்ப்பு முறை

7.1 ஆட்சேர்ப்பு விகிதம்

பதவி	ஒவ்வொரு பிரிவிற்கிணங்கவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் விகிதம்		
	திறந்த	மட்டுப்படுத்தப்பட்ட	திறமை
தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர்	-	-	100%
தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)	100%	-	-
தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் கட்புல செவிப்புல)			
தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)			

குறிப்பு :

1. திறமைகள் பிரிவின்கீழ் எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய போதியவிலான எண்ணிக்கை கொண்ட அலுவலர்கள் தகைமை பெறாதவிடத்து MN2 அல்லது அதனைவிட உயர்வான சம்பளத் தொகுதிகளின் கீழ் சம்பளம் பெறுகின்ற திணைக்களஞ்சார் பதவிகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தையும் உடன்முந்திய ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக்காலத்தையும்கொண்ட 7.4.2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் திறமைகள் பிரிவின்கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

2. இந்த எழுத்துப் பரீட்சைகள் இரண்டுக்கிணங்கவும் ஆட்சேர்ப்புசெய்ய போதியவிலான எண்ணிக்கைகொண்ட அலுவலர்கள் தகைமை பெறாதவிடத்து கீழே குறிப்பிட்ட கல்வித் தகைமைகளைக்கொண்ட ஆட்களிடமிருந்து விணப்பங்கள் கோரப்பட்டு திறந்த பிரின்கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

   கல்வித் தகைமைகள் : கலைமாணி, அழகியல் கலைமாணி, கட்புலக் கலைமாணி, சட்டத்தரணி, கல்விமாணி அல்லது விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   அல்லது ,

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிப்பு நிறுவனமொன்றாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து, கலைமாணி, அழகியல் கலைமாணி, கட்புலக் கலைமாணி,சட்டத்தரணி, கல்விமாணி அல்லது விஞ்ஞானமாணி சாதாரண பட்டத்துடன் பட்டப்பின்னிலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

7.2 திறந்த ஆட்சேர்ப்பு

7.2.1 ஆட்சேர்ப்புத் தரம்: தரம் III

7.2.2 தகைமைகள்:

7.2.2.1 கல்வித் தகைமைகள்:

I. (அ.) தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்):

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிப்பு நிறுவனமொன்றாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,காப்பகஆவண பாதுகாப்பு அல்லது இரசாயனவியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல், அல்லது,
காப்பகஆவண பாதுகாப்பு அல்லது இரசாயனவியல் விஞ்ஞானமாணி சாதாரண பட்டம் பெற்றிருத்தல்

(ஆ.) தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் கட்புல செவிப்புல)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிப்பு நிறுவனமொன்றாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து, கலைமாணி, அழகியல் கலைமாணி, கட்புலக் கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்
அல்லது
கலைமாணி, அழகியல் கலைமாணி, கட்புலக் கலைமாணி சாதாரண பட்டத்துடன் பட்டப்பின்னிலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

(இ.) தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு ஆவணங்கள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிப்பு நிறுவனமொன்றாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து, கணினி விஞ்ஞானம், கணினி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி சாதாரண பட்டத்துடன் பட்டப்பின்னிலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல் பெற்றிருத்தல்

II. க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலத்திற்கு திறமைச்சித்தி அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கிலம் /பொது ஆங்கிலம் பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் அல்லது பட்டப்படிப்பினை ஆங்கில மொழியில் பயின்றிருத்தல்

7.2.2.2 தொழில்சார் தகைமைகள்

7.2.2.3 அனுபவம் : ஏற்புடையதல்ல.

7.2.2.4 உடற்றகைமைகள் : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

7.2.2.5 பிற: I. இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

II. சிறந்த குணநலன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட அவசியமான 7.2.2 தொடக்கம் 7.2.3 வரையான தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்று விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் அத்தகமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7.2.3 வயது:

7.2.3.1 குறைந்தபட்ச எல்லை: 21 வருடங்களுக்கு குறையாத

7.2.3.2 அதிகபட்ச வயது : 35 வருடங்களுக்கு மேற்படாத

7.2.4 ஆட்சேர்ப்பு முறை : எழுத்துப் பரீட்சை மற்றும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடுசெய்யும் நேர்முகப் பரீட்சை மூலமாக

7.2.4.1 எழுத்துப் பரீட்சை : இணைப்பு 01

பாடங்கள்	அதிகபட்ச புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
உளச்சார்பு	100	50%
விடயத்துறைசார்ந்த வினாத்தாள்	100	50%
ஆங்கிலம்	100	50%

7.2.4.1.1 நடாத்தும் அதிகாரி: பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்று மூலமாக

7.2.4.2 தொழில்சார் பரீட்சை : ஏற்புடையதன்று

7.2.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை: ஏற்புடையதன்று (பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான பரீட்சையிலேயே அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.)

7.2.4.4 பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான பரீட்சை:

புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான தலைப்புகள்	அதிகபட்ச புள்ளிகள்	குறைந்த பட்ச புள்ளிகள்
மேலதிக கல்வித் தகைமைகள்	15	ஏற்புடையதன்று.
துறையுடன் தொடர்புடைய தொழில்சார் தகைமைகள்	15	
துறையுடன் தொடர்புடைய அனுபவம்	15	
நேர்முகப் பரீட்சையில் காட்டுகின்ற திறமை	05	
மொத்தப் புள்ளிகள்	**50**	

குறிப்பு :

1. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகளின் அளவுக்குள்ளே பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான ஒவ்வொரு நேர்முகப் பரீட்சைக்கான விபரமான புள்ளிவழங்கல் நடைமுறை தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொண்ட பின்னர் விண்ணப்பங்கள் கோருகின்ற அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்படும்.

2. எழுத்துப் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளின் திறமை வரிசைக்கிரமம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க வெற்றிடங்களைப்போல் நான்கு (04) மடங்கு எண்ணிக்கையுடையோர் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

3. எழுத்துப் பரீட்சையிலும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை வரிசைக்கிரமத்திற்கிணங்க பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

7.2.4.4.1 பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி : அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

7.2.5 விண்ணப்பங்கள் கோருகின்ற முறை : அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல் அல்லது பகிரங்க அறிவித்தல்களை பிரசுரித்தல் மற்றும் வெப் தளத்தில் பிரசுரித்தல் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு : ஏற்புடையதன்று.

7.4 திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

7.4.1 ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

7.4.2 தகைமைகள் :

7.4.2.1 கல்வித் தகைமைகள்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டமளிப்பு நிறுவனமொன்றாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,கலைமாணி, அழகியல் கலைமாணி, கட்புலக் கலைமாணி, சட்டமாணி, கல்விமாணி அல்லது விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல்

7.4.2.2 தொழில்சார் தகைமைகள்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் அல்லது இந்நாட்டு அல்லது வெளிநாட்டு தேசிய ஆவணக்காப்பக நிறுவனமொன்றில் பதிவுகள் முகாமைத்துவம், காப்பஆவண நிருவாகம், பதிவுகள் பாதுகாத்தல், ஆவணகாப்பக விஞ்ஞானம், ஆவணகாப்பக் கல்வி, மத்தியகால ஒல்லாந்து மொழி, மத்தியகால போர்த்துக்கேய மொழி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்கேனும் குறைந்தபட்சம் 06 மாதகால பயிற்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்

7.4.2.3 அனுபவம் :

I. சிரேட்ட காப்பகஆவண நிபுணர் பதவியில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமிக்க சேவைக் காலத்தைக்கொண்ட அலுவலராதல்
அல்லது
II. சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெளிக்களம்சார்ந்த / அலுவலகம்சார்ந்த தொகுதி I சேவைப் பிரிவில் காப்பகஆவண நிபுணர் பதவியில் மூன்று (03) வருட அனுபவத்துடன் திணைக்களஞ்சார் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்ககாலத்தைக்கொண்ட அலுவலராதல்
அல்லது
III. தொடரிலக்கம் II இன்கீழ் குறிப்பிட்டுள்ள சிரேட்ட காப்பகஆவண நிபுணர் பதவியில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற அலுவலராதல்

7.4.2.4 உடற்றகைமைகள்: ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

7.4.2.5 பிற:

I. பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்
II. உடன்முந்திய ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்
III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட அவசியமான தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்று விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் அத்தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7.4.3 வயது : உள்ளக விண்ணப்பதரிகளுக்கு அதிகபட்ச வயதெல்ல ஏற்புடையதன்று.

7.4.4 ஆட்சேர்ப்பு முறை

7.4.4.1 எழுத்துப் பரீட்சை : இணைப்பு 02

பாடங்கள்	அதிகபட்ச புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
1. பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் பற்றிய விடயத்துறைசார்ந்த அறிவு	100	40%
2. ஆங்கிலம்	100	40%

7.4.4.1.1 நடாத்தும் அதிகாரி: பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்று மூலமாக

7.4.4.2 தொழில்சார் பரீட்சை: ஏற்புடையதன்று

7.4.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதன்று. (பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான பரீட்சையிலேயே அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.)

7.4.4.4 பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான பரீட்சை:

புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான தலைப்புகள்	அதிக பட்ச புள்ளிகள்	குறைந்த பட்ச புள்ளிகள்
மேலதிக சேவை அனுபவம்	60	ஏற்புடையதன்று.
மேலதிக கல்வித் தகைமைகள்	20	
மேலதிக தொழில்சார் தகைமைகள்	15	
நேர்முகப் பரீட்சையில் காட்டுகின்ற திறமை	05	
மொத்தப் புள்ளிகள்	100	

குறிப்பு :

1. *மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகளின் அளவுக்குள்ளே பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான ஒவ்வொரு நேர்முகப் பரீட்சைக்கான விபரமான புள்ளிவழங்கல் நடைமுறை தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொண்ட பின்னர் விண்ணப்பங்கள் கோருகின்ற அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்படும்.*

2. *எழுத்துப் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளின் திறமை வரிசைக்கிரமம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க வெற்றிடங்களைப்போல் இரு மடங்கு எண்ணிக்கையுடையோர் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.*

3. *எழுத்துப் பரீட்சையிலும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை வரிசைக்கிரமத்திற்கிணங்க பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.*

7.4.4.4.1 பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி: அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

7.4.5 விண்ணப்பங்கள் கோருகின்ற முறை: உள்ளக அறிவித்தல் மற்றும் வெப் தளத்தில் அறிவித்தல்களை பிரசுரித்தல் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

08. வினைத்திறன்காண் தடைதாண்டல்

8.1

வினைத்திறன்காண் தடைதாண்டல்	எத்தனை வருடங்களிற்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்	வினைத்திறன் காண்தடைதாண்டலின் தன்மை எழுத்துப் பரீட்சை / தொழில்சார் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/வேறு

1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்	*III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாவதற்குள்*	*எழுத்துப் பரீட்சை இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது.*
2 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்	*II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் பூர்த்தியாவதற்குள்*	*எழுத்துப் பரீட்சை இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளது.*
3 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்	*I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியாவதற்குள்*	*சான்றிதழ் பாடநெறி/வேறு இணைப்பு 05 இல் காட்டப்பட்டுள்ளது.*

8.2 வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை எவ்வளவு காலத்திற்கொருதடவை நடைபெறும் : வருடத்திற்கு இருதடவைகள்

8.3 வினைத்திறன்காண் தடைதாண்டலுடன் தொடர்படைய பரீட்சைகளை நடாத்துகின்ற அதிகாரிகள் யாவர் :

1ஆம் வினைத்திறன்காண்தடைதாண்டல் *2ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல்* *3 ஆம் வினைத்திறன்காண்தடைதாண்டல்*	தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றினால்

09. மொழித்தேர்ச்சி

9.1

மொழி	பெறவேண்டிய தேர்ச்சி
01. அரசகரும மொழி	*அரசகரும மொழியல்லாத மொழியொன்றில் சேவையில் நியமனம்பெற்ற அலுவலர் ஒருவர் பதவியில் நிரந்தமாக்கப்பட முன்னர் அரசகரும மொழியொன்றில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல்.*
02. மற்றைய அரசகரும மொழி	*அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 01/2014 ஆம் இலக்க மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய உரியமட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

10. தரமுயர்வு வழங்குதல்

10.1 ***III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு தரமுயர்த்துதல்***

10.1.1 பொதுவான செயலாற்றுகைக்கிணங்க

10.1.1.1 பூர்த்திசெய்வேண்டிய தகைமைகள்:

I.நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்,

II. சேவை வகையில் III ஆம் தரத்தில் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தலும் பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்,

III.ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலாழுங்கிற்கு இணங்க தரமுயர்வுபெறும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்தியான மட்டத்தில் அல்லது அதனைவிட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்,

IV.தரமுயர்வுத் தினத்திற்கு உடன்முந்திய ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்,

V. மற்றைய அரசகரும மொழியில் உரிய மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல்,

VI. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்,

VII. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் அல்லது இந்நாட்டு அல்லது வெளிநாட்டு தேசிய ஆவணக்காப்பக நிறுவனமொன்றில் பதிவுகள் முகாமைத்துவம், காப்பஆவணகள் நிருவாகம், பதிவுகள் பாதுகாத்தல், ஆவணகாப்பக விஞ்ஞானம், ஆவணகாப்பக கல்வி, மத்தியகால ஒல்லாந்து மொழி மற்றும் மத்தியகால போர்த்துக்கேய மொழி ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திற்கு ஆறு (06) மாத மற்றும் குறைந்த பட்சம் மேலும் ஒரு பாடத்திற்கு மூன்று (03) மாத அல்லது குறைந்தபட்சம் 36 மணித்தியால விசேட பயிற்சி பெற்றிருத்தல்.

10.1.1.2 **தரமுயர்வு வழங்கும் முறை** : தகைமைகளை பூர்த்திசெய்யும் அலுவலர்கள் உரிய மாதிரியின் மூலம் தரமுயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் கோரிக்கைவிடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைபெறும் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வரை II ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்கப்படும்.

10.2 II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல்

10.2.1. சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.2.1.1 **பூர்த்திசெய்யவேண்டிய தகைமைகள்**:

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டமளிப்புச் செய்கின்ற நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பதிவுகள்கள முகாமைத்துவம் அல்லது பதிவுகள் பாதுகாத்தல் அல்லது ஆவணகாப்பகல்வி அல்லது ஆவணகாப்ப விஞ்ஞானம் அல்லது தகவல் கல்வி பற்றிய பட்டப்பின்னிலைப் பட்டம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டமளிப்புச் செய்கின்ற நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வரலாறு, சிங்களம், பாளி அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்காக பெறப்பட்ட பட்டப்பின்னிலைப்பட்டம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் அல்லது ஆவணகாப்பகல்வி அல்லது ஆவணகாப்ப விஞ்ஞானம் அல்லது தகவல் கல்வி பற்றிய ஒரு வருட பட்டப்பின்னிலை டிப்புளோமா பெற்றிருத்தல்,

II. சேவை வகையில் II ஆம் தரத்தில் ஏழு (07) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தலும் ஏழு (07) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்:

III. தரமுயர்வுத் திகதிக்கு உடன்முந்திய ஐந்து (05) வருடகாலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்திசெய்திருத்தல்:

IV. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு ஏழு (07) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனைவிட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்:

V. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.2.1.2 தரமுயர்வு வழங்கும் முறை : தகைமைகளை பூர்த்திசெய்யும் அலுவலர்கள் உரிய மாதிரியின் மூலம் தரமுயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் கோரிக்கைவிடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைபெறும் திகதிமுதல் நடைமுறைக்கு வரும்வரை I ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்கப்படும்.

குறிப்பு:
சாதாரண மட்டத்திலான செயலாற்றுகைக்கிணங்க தரமுயர்வு வழங்கப்படும் நோக்கத்திற்காக உரிய தினத்தில் வினைத்திறன்காண் தடையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களின் தரமுயர்வுத் தினத்தை வினைத்திறன்காண் தடையில் சித்தியடைய தாமதித்த காலப்பகுதிக்கு சமமான காலப்பகுதியளவு தாமதப்படுத்தல் வேண்டும்.

11. *பதவிகளக்கு நியமனம் வழங்குதல் :*

11.1 தகைமைகள்:

பதவி	தகைமைகள்	தெரிவுசெய்யப்படுகின்ற விதம்
தேசிய ஆவணக்காப்பக பணிப்பாளர்	நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்தைச்சேர்ந்த அலுவலராதல்	நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்தைச்சேர்ந்த அலுவலர்கள் மத்தியில் மிகுந்த சேவைமூப்புகொண்ட அலுவலர் பதவிக்காக நியமிக்கப்படுவார்.

குறிப்பு *:*
III ஆம் தரத்தைச்சேர்ந்த அலுவலரொருவர் II அம் தரத்திற்கு தரமுயர்வுசெய்யப்பட்ட பின்னர் பதவிப்பெயர் பிரதி ஆவணக்காப்பகப் பணிப்பாளர் என திருத்தஞ்செய்யப்படும். பிரதி ஆவணக்காப்பகப் பணிப்பாளர் பதவிக்காக III ஆம் தரத்தைச்சேர்ந்த அலுவலர்கள் பதிற்கடமையாற்றும் அடிப்படையில் அல்லது கடமையை ஈடேற்றும் அடிப்படையில் நியமிக்கப்படமாட்டார்கள்.

12. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளில் காட்டப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகளுக்கு புறம்பான நிபந்தனைகள் *(ஏற்புடையதன்று)*

13. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளில் காட்டப்பட்டுள்ள பொருள்கோடலுக்கு புறம்பான பொருள்கோடல்கள்:

"செயலூக்கமிக்க சேவைக்காலம் என்பது தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்றநிலையில் உண்மையாகவே கடமையில் ஈடுபட்டிருந்த சேவைக்காலத்தைக் குறிக்கும். செயலூக்கமிக்க காலப்பகுதியாக கருதப்பட வேண்டுமென அமைச்சரவையினால் கொள்கை அடிப்படையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக்காலம் தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற லீவுக்காலப்பகுதிகளும் செயலூக்கமிக்க காலப்பகுதிக்காரி கணக்கிடப்படமாட்டாது."

14. உள்ளீர்த்தல் *(ஏற்புடையதன்று)*

15. ஒவ்வொரு நியமனம் சம்பந்தமாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 1589/30 இலக்கமும் 2009.02.20 திகதியும்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட செயலொழுங்கு விதிகளில் காட்டப்படுள்ள பொதுவான நிபந்தனைகளும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளும் ஏற்புடையனவாகும்.

16. இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் இருப்பின் அது சம்பந்தமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முடிவு எடுக்கப்படும்.

17. இடைக்கால ஏற்பாடுகள் (இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க முதல்த்தடவையாக திறமைகள் முறையின்கீழ் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யும்போது 7.4.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்கின்ற அலுவலர்கள் 7.4.4.4 இன் கீழ் குறிப்பிட்டுள்ள பொருத்தப்பாட்டினை மதிப்பீடுசெய்கின்ற நேர்முகப் பரீட்சையில் பெறுகின்ற திறமை வரிசைக்கிரமப்படி மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

தயாரித்தவர் : *பரிசோதித்தவர்:*

[கையொப்பம்] *[கையொப்பம்]*

பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ *பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய*
பதவி: நிருவாக அலுவலர் *பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)*
திகதி: 2018.09.14 *திகதி: 2018.09.14*

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14 *உத்தியோகபூர்வ இலச்சினை:*

.

தொடர்பு இலக்கம்:………………………………………

2018.06.14 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகையின் பதவிகளுக்கான இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்து விதப்புரை செய்கிறேன்.

[கையொப்பம்:]

பதவி :………………………………………
பெயர்:………………………………………
செயலாளர்
உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
திகதி: 2018.09.25 *உத்தியோகபூர்வ இலச்சினை:*

.

_

தொடர்பு இலக்கம்:………………………………………

தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகையின் பதவிகளுக்கான இந்த ஆட்சேர்ப்பு நடைமுறை.. ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

[கையொப்பம்:]

எம். எ. பீ. தயா செனறத்
செயலாளர்
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
திகதி : 2018.10.29 *உத்தியோகபூர்வ இலச்சினை:*

01. பரீட்சையின் பெயர்: தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவைகள் வகையின் பதவி ஆட்சேப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் : எழுத்துப் பரீட்சையாகும்.

வினாத்தாள்	காலம்	மொத்தப் புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
01. உளச்சார்பு	01 மணித்தியாலம்	100	50
02. விடயத்துறைசார்ந்த வினாத்தாள்	02 மணித்தியாலம்	100	50
03. ஆங்கிலம்	02 மணித்தியாலம்	100	50

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனத்தினால்

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை நடாத்தப்படும்: வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

வினாத்தாள்	பாடத்திட்டம்
01. உளச்சார்பு	பரீட்சார்த்தி கொண்டுள்ள பொது அறிவு, தர்க்க ஆற்றல், கருத்து வெளிப்பாடு, எண்ணிக்கைசார் திறன் மற்றும் கிரகிக்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடுவதற்கான வினாத்தாள்.
02. விடயத்துறைசார்ந்த வினாத்தாள்	பதவிகளுக்கு ஏற்புடைய தொழில்நுட்ப அறிவினை அளவிடுகின்ற வினாக்களை உள்ளடக்கியதாகும்.
03. ஆங்கிலம்	பரீட்சார்த்தியின் மொழியறிவு, கிரகிக்கும் ஆற்றல் மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல் என்பவற்றை அளவிடுகின்ற வினாத்தாளாகும்.

தயாரித்தவர் :

[கையொப்பம்]

பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ
பதவி: நிருவாக அலுவலர்
திகதி: 2018.09.14

பரிசோதித்தவர்:

[கையொப்பம்]

பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய
பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)
திகதி: 2018.09.14

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14

உத்தியோகபூர்வ இலச்சினை:

01. பரீட்சையின் பெயர்: தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவைகள் வகையின் பதவிகளுக்கு திறமை அடிப்படையில் ஆட்சேப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் : எழுத்துப் பரீட்சையாகும்.

வினாத்தாள்	காலம்	மொத்தப் புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
01. பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் பற்றிய விடயத்துறைசார்ந்த அறிவு	02 மணித்தியாலம்	100	40
02. ஆங்கிலம்	02 மணித்தியாலம்	100	40

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனத்தினால்

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை நடாத்தப்படும்: வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

வினாத்தாள்	பாடத்திட்டம்
01. பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் பற்றிய விடயத்துறைசார்ந்த அறிவு	பதிவுகள் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் பற்றிய விடயத்துறைசார்ந்த அறிவினை அளவிடுகின்ற வினாக்களை உள்ளடக்கியதாகும்.
02. ஆங்கிலம்	பரீட்சார்த்தியின் மொழியறிவு, கிரகிக்கும் ஆற்றல் மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல் என்பவற்றை அளவிடுகின்ற வினாத்தாளாகும்.

தயாரித்தவர் :

[கையொப்பம்]

பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ
பதவி: நிருவாக அலுவலர்
திகதி: 2018.09.14

பரிசோதித்தவர்:

[கையொப்பம்]

பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய
பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)
திகதி: 2018.09.14

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14

உத்தியோகபூர்வ இலச்சினை:

***01. பரீட்சையின் பெயர்: தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்காள் முதலாவது** (I) வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை*

***02.** பரீட்சை பற்றிய விபரம் :*

வினாத்தாள்	**காலம்**	**மொத்தப் புள்ளிகள்**	**சித்தியடைவதற்கான புள்ளிகள்**
01. தாபன மற்றும் நிதி நிருவாகம்	*03 மணித்தியாலம்*	*100*	*40%*
02. திணைக்கள சட்டவிதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடவடிக்கை முறைகள்	*02 மணித்தியாலம்*	*100*	*40%*

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால்

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை நடாத்தப்படும்: ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

வினாத்தாள்	**பாடத்திட்டம்**
01. தாபன மற்றும் நிதி நிருவாகம்	*1.* அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் *2.* தாபனவிதிக்கோவையின் முதலாவது தொகுதியின் *I, II,III,V,VI,VII,IX,XI,XXIII,XXV,XXVI,XXVII,XXVIII,XXIX,XXX,XXXIXXXII, XXXIII* அத்தியாயங்கள் பற்றிய அறிவு *3.* தாபன விதிக்கோவையின் *II* ஆம் தொகுதியின் *XLVII* மற்றும் *XLVIII* அத்தியாயங்கள் பற்றிய அறிவு *4.* நிதிஒழுங்குவிதியின் *I, II, III, IV, V, VI, VII, VIII, XI, XII, XIII, XIV* அத்தியாயங்கள் பற்றிய அறிவு
02. திணைக்கள சட்டவிதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடவடிக்கை முறைகள்	*1.* தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் அலுவல்களுடன் தொடர்புடைய சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் *2.* பதிவுகள்/ காப்பகஆவண நிருவாகம் மற்றும் பாதுகாத்தல் கோட்பாடுகள் *3.* தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு மற்றும் தாபனக் கட்டமைப்பு *4.* காப்பகஆவணங்கள் பாதுகாப்பக செயற்பாங்கு மற்றும் அவற்றில் வைக்கப்பட்டுள்ள பதிவுகள் பற்றிய புரிந்துணர்வும் விளக்கமும்

தயாரித்தவர் :

[கையொப்பம்]

பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ
பதவி: நிருவாக அலுவலர்
திகதி: 2018.09.14

பரிசோதித்தவர்:

[கையொப்பம்]

பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய
பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)
திகதி: 2018.09.14

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14 *உத்தியோகபூர்வ இலச்சினை:*

01. **பரீட்சையின் பெயர்: தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்கான இரண்டாவது** (II) வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் :

வினாத்தாள்	காலம்	மொத்தப் புள்ளிகள்	சித்தியடைவதற்கான புள்ளிகள்
1. மத்தியகால ஆங்கிலம் அல்லது மத்தியகால ஒல்லாந்த மொழி அல்லது பதிவுகள் முகாமைத்துவம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	03 மணித்தியாலம்	100	40%
2. இலங்கை வரலாறு	02 மணித்தியாலம்	100	40%

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால்

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருதடவை நடாத்தப்படும்: ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம்

வினாத்தாள்	பாடத்திட்டம்
01. மத்தியகால போர்த்துக்கேய அல்லது மத்தியகால ஒல்லாந்த மொழி அல்லது பதிவுகள் பாதுகாத்தல் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	தேசிய சுவடிக்கூட திணைக்களத்தில் போர்த்துக்கேய அல்லது ஒல்லாந்த பதிவுகளின் பிரித்தெடுத்த பகுதிகளை சிங்களத்திற்கு/ தமிழுக்கு/ ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல் உக்கிப்போன கடதாசி, ஓலைச்சுவடிகள், கட்புலசெவிப்புல, திரைப்பட நாடாக்களின் பாதுகாத்தல் முறையியல்களும் தரநியமங்களும் மின்னணு காப்பக ஆவண முகாமைத்துவம் பற்றிய அறிவு
02. இலங்கை வரலாறு	1640 இற்பு பிற்பட்ட இலங்கை வரலாறு

தயாரித்தவர் :

[கையொப்பம்]

பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ
பதவி: நிருவாக அலுவலர்
திகதி: 2018.09.14

பரிசோதித்தவர்:

[கையொப்பம்]

பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய
பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)
திகதி: 2018.09.14

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14

உத்தியோகபூர்வ இலச்சினை:

01. *பரீட்சையின் பெயர்: தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைக்கான மூன்றாவது (III) வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை*

02. *பரீட்சை பற்றிய விபரம்: அங்கீகரிக்கப்பட்ட தேசிய ஆவணக்காப்பக நிறுவனமொன்றில் ஆவணக் காப்பக படுத்தல்துறையின் கீழ் ஒரு வருட கால பயிற்சி சான்றிதழை பெற்றிருத்தல்*

அல்லது

ஆவணக் காப்பக படுத்தல்துறையின்கீழ் மூன்று (03) மாதங்களுக்குள் ஆய்வுக்கட்டுரையொன்றினை அல்லது நூலொன்றினை பூர்த்திசெய்திருத்தல் .

தயாரித்தவர் :	*பரிசோதித்தவர்:*
[கையொப்பம்]	*[கையொப்பம்]*
பெயர்: ஆர்.பீ.என்.ஆர்.கே. ராஜபக்ஷ	*பெயர்:பீ.எம்.நிசங்கலா பாலசூரிய*
பதவி: நிருவாக அலுவலர்	*பதவி:உதவிப்பணிப்பாளர(நிருவாகம்)*
திகதி: 2018.09.14	*திகதி: 2018.09.14*

விதப்புரைசெய்து சமர்ப்பிக்கிறேன்.

[கையொப்பம்:]

பெயர் : கலாநிதி நதீரா ரூபசிங்க
பதவி : தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.09.14 *உத்தியோகபூர்வ இலச்சினை:*